செ.வெ.எண்: 777/2016 நாள்: 06.11.2016

**கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எஸ்.இளங்கோ, அவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெற்ற குரூப்-4 எழுத்துத்தேர்வினை நேரில் சென்று பார்வையிட்டு இன்று (06.11.2016) ஆய்வு செய்தார்.**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-4 மூலம் இளநிலை உதவியாளர், வரித்தண்டலர், வரைவாளர், தட்டச்சர், மற்றும் நில அளவர் ஆகிய பதவிகளுக்கு காலியாகவுள்ள 5450 பணியிடங்களை நிரப்புவதற்கு, எழுத்துத்தேர்வு இன்று (06.11.2016) நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எஸ்.இளங்கோ அவர்கள், நாகர்கோவில், எஸ்.எல்.பி அரசு மேல்நிலைப்பள்ளியில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-4-க்கான நடைபெற்ற எழுத்துத் தேர்வினை நேரில் பார்வையிட்டு தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் குரூப்-4 எழுத்துத்தேர்வுக்காக 42,586 நபர்கள் விண்ணப்பத்திருந்தார்கள். நாகர்கோவில், குழித்துறை, தக்கலை, கன்னியாகுமரி மற்றும் தோவளை என ஐந்து பகுதியில் உள்ள 85 மையங்களில்123 தேர்வு கூடங்களில் இத்தேர்வு நடைபெறுகிறது. இத்தேர்வினை கண்காணிக்க 123 வருவாய்த்துறை அலுவலர்களும், 85 வீடியோ பதிவாளர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்வினை எவ்வித இடையூறு இல்லாமல் நடைபெற துணை ஆட்சியர்கள் நிலையில் பத்து பறக்கும் படை அலுவலர்களும், பதினேழு மொபைல் குழுக்களும் (நடமாடும் தேர்வு கண்காணிக்கும் குழு) அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் இன்று நடைபெற்ற தேர்வில் 52 மாற்றுதிறனாளிகள் மற்றும் பார்வையற்றவர்கள் கலந்து கொண்டனர் என தெரிவித்தார்.

பின்னர் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை மேல்நிலைப்பள்ளிக்கு சென்று ஆய்வு செய்தார்.

இன்று நடைபெற்ற குரூப்-4 தேர்வுக்கு 8,094 நபர்கள் தேர்வு எழுத வரவில்லை.

ஆய்வின் போது நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார், அகஸ்தீஸ்வரம் வட்டாச்சியர் திரு.எ.வி மூர்த்தி, தலைமையாசிரியர் திரு.விஜயன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம்.